செ.வெ.எண்: 31 நாள்: 20.12.2017

ந.க:ஓ3: 27923/17 நாள்: 20.12.17

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கடலூர்.

## பத்திரிக்கைச் செய்தி

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோவில் ஆருத்ரா தரிசனம் பெருவிழா நடைபெறும் நாளான 02.01.2018 செவ்வாய்க்கிழமை கடலூர் மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு அரசு அலுவலகங்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்படுகிறது. அவ்விடுமுறையை ஈடு செய்யும் வகையில் ஜனவரி மாதத்தில் விடுமுறை நாளான 20.01.2018 சனிக்கிழமை அன்று வேலை நாளாக அறிவிக்கப்படுகிறது. மேலும், உள்ளூர் விடுமுறை நாளாக அறிவிக்கப்படும் 02.01.2018 செவ்வாய்க்கிழமை அன்று அவசர அலுவல்களை கவனிக்கும் பொது முக்கியத்துவம் வாய்ந்த அரசு அலுவலகங்கள் அவசர பணிகளை கவனிக்கும் பொருட்டு குறைந்த பட்ச பணியாளர்களோடு செயல்படும் என அறிவிக்கப்படுகிறது.

(ஓம்) பிரசாந்த் மு. வடநேரே
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கடலூர்.

/உ.ந.உ.ப/

மாவட்ட ஆட்சியருக்காக.

20/12/17

வெளியீடு:- செ.ம.தொ.அ.கடலூர்.